தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஹேவிளம்பி, ஆனி 26, திருவள்ளுவர் ஆண்டு–2048

2017 ஜூலை 10, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஈதல்; இசைபட வாழ்தல்; அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"

ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும். அதன்மூலம் புகழ் உண்டாக வாழ வேண்டும். அந்தப் புகழைத் தவிர உயிருக்கு உறுதி தருவது வேறெதுவும் இல்லை.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 161, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

161—

சாலை அமைத்தல்

***12902—திரு. கு. இராதாமணி:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம்–அனந்தபுரம் நெடுஞ்சாலையில் கடையம்–நல்லாப்பாளையம் வரை சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் மாண்புமிகு திரு. கு. இராதாமணி அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம்–அனந்தபுரம் நெடுஞ்சாலையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரும் கடையம்–நல்லாப்பாளையம் வரையிலான சாலை உடையாநத்தம் காப்புக் காட்டினுள் செல்வதால், வனப் பாதுகாப்புச் சட்டம் 1980–ன்படி மத்திய அரசின் அனுமதியைப் பெற வேண்டும். எனவே, சாலை அமைக்கவுள்ள துறைகளான, நெடுஞ்சாலைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை ஆகியவை உரிய பிரேரணையை மத்திய அரசின் இணையதளத்தின்மூலம் விண்ணப்பிக்கும்பட்சத்தில், வனத் துறை தொடர் நடவடிக்கை எடுத்து, சாலை அமைக்க ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி அவர்கள்.

திரு. கு. இராதாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டாச்சிபுரம்–அனந்தபுரம் நெடுஞ்சாலையில் கடையம்–நல்லாப்பாளையம் வரை சாலை அமைப்பது சம்பந்தமாக 3–3–2017–ல் tender கோரப்பட்டு, ஒப்பந்ததாரரும் அந்த வேலையை எடுத்து இதுவரை அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. கண்டாச்சிபுரம்–அனந்தபுரம் நெடுஞ்சாலையில், கடையத்திலிருந்து நல்லாப்பாளையம் வரை இருக்கின்ற 650 மீட்டர் சாலை வனத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற காரணத்தினால் அதனுடைய அனுமதி பெற்றால்தான் வேலையைத் தொடங்க முடியும் என்று அவர்கள் கூறுகிறார்கள். அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், நல்லாப்பாளையத்திலிருந்து சுமார் 4 கிலோ மீட்டர் தூரம் மேற்குப் பகுதியில் வனச் சாலை இருக்கின்றது. அந்தச் சாலை முடியும் இடத்தில், திருக்கோவிலூர் தொகுதியில், மறைந்த மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களால், கஸ்தூரிபாய் காந்தி தேசிய நினைவு அறக்கட்டளை தொடங்கி வைக்கப்பட்டு, இன்றைக்கு அந்த இடத்தில் தொழுநோய் சிகிச்சை மையம்,

கண் சிகிச்சை நிலையம், கல்வியியல் கல்லூரி மற்றும் பெண்கள் நர்சிங் கல்லூரி ஆகியவை இயங்குகின்றன. கடையம், கருவாச்சி, நல்லாப்பாளையம், வெள்ளையாம்பட்டு, பனமலைப்பேட்டை, அத்தியூர் திருக்கை, அன்னியூர் ஆகிய ஊராட்சிகளிலிருந்து 3 கிலோ மீட்டர் தூரம் வரை அந்த இடத்திற்குச் செல்ல வேண்டிய பொதுமக்கள் மற்றும் மாணவ மாணவியர்கள் எல்லாம் கண்டாச்சிபுரம் சென்று, கண்டாச்சிபுரத்திலிருந்து பிறகு 8 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள அடுக்கம் கிராமத்தின் எல்லையில், மழுவந்தாங்கல் எல்லையோரத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற அந்தத் தொழுநோய் மருத்துவமனைக்குச் செல்லவேண்டியிருக்கிறது. ஆக, நல்லாப்பாளையம்–குறிஞ்சிக்காட்டில் அமைக்கப்பட்டுள்ள அந்த மருத்துவமனை 4 கிலோ மீட்டர் தூரத்தில்தான் இருக்கின்றது. நல்லாப்பாளையம் ஊராட்சியின் சார்பாக 'தாய்' திட்டத்தின்கீழ் 60 மீட்டர் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 4 கிலோ மீட்டர் சாலை formation செய்யப்பட்டுள்ளது. அதற்கு மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி வாங்கித் தந்து, அந்தச் சாலை அமைக்கப்பட்டால் பொதுமக்கள் எளிதாக அந்தப் பகுதியைச் சென்றடைய முடியும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனைச் செய்து தருவார்களா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதாமணி அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலையைப் பற்றிய குறிப்புகளை வனத் துறைக்கோ அல்லது என்னிடமோ ஒப்படைத்தால், அவர் குறிப்பிட்ட அந்தச் சாலைக்கு துறையின்மூலமாக மத்திய அரசினுடைய இணையதளத்தில் மனு செய்து உரிய நடவடிக்கைகள் மாவட்ட வனத் துறை மூலமாக செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே, தி.மு.க. ஆட்சி நடைபெற்ற 2006–2011–ல் விழுப்புரம் மாவட்டத்தில் அவர் குறிப்பிட்ட அந்த வனச் சாலைகள் போடப்படவில்லை. ஆனால், 2011–2017–ல் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய ஆட்சியில், 1.70 கிலோ மீட்டர் தூரத்திற்கு 40 இலட்சம் ரூபாய் சாலைக்காக அந்த மாவட்டத்திற்கு செலவு செய்யப்பட்டிருக்கிறது.

2006–2011–ல் தி.மு.க. ஆட்சியில் 449 கிலோ மீட்டர் சாலைகளுக்காக மொத்தமே ரூ.30.66 கோடிதான் செலவு செய்திருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், 65 கிலோ மீட்டர் வனச் சாலைகள் ஏறத்தாழ ரூ.107 கோடியில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலை சம்பந்தப்பட்ட குறிப்புகளை என்னிடம் கொடுத்தால், விரைவிலே நிதித் துறையிடம் நிதியாதாரத்தைப் பெற்று அந்தச் சாலைகள் சீரமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. இராதாமணி அவர்கள்.

திரு. கு. இராதாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே அவையில் திருக்கோவிலூர் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அண்ணன் பொன்முடி அவர்கள், அடுக்கம் முதல் தண்டரை வரையான 4½ கிலோ மீட்டர் சாலை வனத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ளதைச் சொன்னார்கள். அந்தப் பகுதிக்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், சுமார் 15 கிலோ மீட்டர் சுற்றளவில் இருக்கின்ற மக்களெல்லாம், 15 கிலோ மீட்டர் சுற்றி வர வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்தச் சாலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரி செய்வதற்கு ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன். இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களும், 'நான் விரைவில் பெற்றுத் தருவேன்' என்று சொல்லியிருந்தார். ஆனால், இதுவரையில் அதற்கு அனுமதி தரப்படவில்லை. இதற்காக, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதியினுடைய கிராம முக்கியஸ்தர்களை வனத் துறை அதிகாரிகள் மற்றும் D.F.O. ஆகியோரிடம் அழைத்துச் சென்று நேரிலே கோரிக்கை மனுவினையும் அளித்தார். அவரும், 'நான் உடனடியாக அதற்கான அனுமதியைத் தருகிறேன்' என்று சொன்னார். அதுவும் இதுவரையில் தரப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நினைவுபடுத்துகிறேன். இயல்பாகவே, வனத் துறைச் சாலைகள் எல்லாம் கரடு முரடானவை. கல்லும், முள்ளும் நிறைந்தவை. மக்கள் செல்வதற்கு சற்று சிரமமான சாலைகளாக இருந்தாலுங்கூட, மக்கள் பயன்படுத்துகிற வகையிலும் வாகனங்கள் செல்லக்கூடிய

வகையிலும் சாலைகளை அமைக்க உடனடியாக அதற்கான ஆணைகளை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் பிறப்பித்து, சாலைகளை சரி செய்து தர வேண்டும். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் வகிக்கும் வனத் துறை கரடு முரடாக இருந்தாலும், மென்மையாக பதில் சொல்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சாலைகளையெல்லாம் சீர் செய்வதற்கு உதவி செய்வார்களா என்று தங்கள்மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர், உங்களை மிகவும் மென்மையானவர் என்று சொல்லிவிட்டார், பாருங்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு விக்கிரவாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கு. இராதாமணி அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு முன்னாள் அமைச்சர் முனைவர் க. பொன்முடி அவர்களுடைய பகுதியைப் பற்றியும் இங்கே சொல்லியிருக்கிறார்கள். அவரும், துணைக் கேள்வி கேட்பதற்கு கையை உயர்த்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்கின்றபொழுது அவருக்குரிய குறிப்பினைப் பெற்றுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராதாமணி அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலைக்கு, நான் ஏற்கெனவே சொன்னபடி, உங்கள் மாவட்டத்திலே எந்தச் சாலையாக இருந்தாலும் அந்தக் குறிப்புகளைக் கொடுத்தால் விரைவான நடவடிக்கை எடுத்து இருக்கின்ற சூழ்நிலையைப் பயன்படுத்தி அவை சரி செய்யப்படும். ஏற்கெனவே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கூறியிருக்கிறேன். பல மலைப் பகுதிகளிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், கட்சி வேறுபாடின்றி, தி.மு.க. காங்கிரஸ், அ.தி.மு.க. என இருக்கிற அத்தனை கட்சிகளுமே வனச் சாலைகளினால் பாதிக்கப்படுகிற மக்களைப் பற்றி அதிகமாகச் சொல்லியிருக்கிறார்கள். எங்களுக்கு சிறப்பு நிதி ஒதுக்கிட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களிடம் கோரியிருந்தேன்; ‘தனியாக ஒரு review meeting, PCCF, Chief Secretary, Forest Secretary அத்தனைபேரையும் வைத்து, இந்தச் சபை முடிந்தவுடனே, கூட்டத்தை நடத்தி, எவ்வளவு நிதி தேவையோ, நிதியாதாரத்தை வைத்து நான் உங்களுக்கு அதை அதிகரித்துத் தருகின்றேன்’ என்ற உறுதிமொழியைக் கொடுத்திருக்கின்ற அந்தச் செய்தியையும்

உங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய அந்தக் கருத்துக்கு விரைவான நடவடிக்கை நிதியாதாரத்தைப் பொறுத்து எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. எஸ். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், தமிழக முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, பவானிசாகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, தாளவாடி ஒன்றிய மலைப் பகுதியான தலைமலை ஊராட்சி, காளிதிம்பம், ராமர் அணை, மாவனத்தம் ஆகிய வன செட்டில்மென்ட் பகுதிகளிலும் மற்றும் ஆசனூர் ஊராட்சி, கெத்தேசால் வன செட்டில்மென்ட் பகுதிகளிலும், மற்றும் மாக்கம்பாளையம் பகுதியில் 7 கிலோ மீட்டர் தூரமுள்ள வனச் சாலைப் பகுதிகளிலும் வனச் சாலையை தார்ச் சாலையாக அமைத்துத் தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்ட அந்தப் பகுதிக்கும், ஏற்கெனவே சொன்ன பதில்தான்* applicable *ஆகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலமாக குறிப்புகள் எங்களுக்குக் கொடுக்கப்படுமேயானால், அதன்பொருட்டு அந்தப் பணிகள் நல்ல முறையில் நிதியாதாரத்தைப் பெற்றுச் செய்யப்படும் என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இன்பசேகரன் அவர்கள்.*

திரு. பி.என்.பி. இன்பசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்கி, பெண்ணாகரம் முதல் போடூர், சிவலிங்கபுரம் வரை அஞ்செட்டி, கனகபுரா, மைசூர் செல்வதற்கு கடந்த 2000–2001 ஆம் ஆண்டு வனத் துறையின் மூலமாக முத்தூர், சின்னாறு காடுகளின் வழியாக சாலை அமைக்க டெண்டர் விடப்பட்டது. அப்போது*

7 பாலங்கள் மட்டும் அந்தச் சாலையில் கட்டி முடிக்கப்பட்ட நிலையில் அந்தப் பாலங்கள் அனைத்தும் காட்டாற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டன. எங்களுடைய மாவட்ட மக்கள் தற்போது மைசூர் செல்ல வேண்டுமென்றால் சுமார் 150 கிலோ மீட்டரும், கனகபுரா மற்றும் பெங்களூரு செல்ல வேண்டுமென்றால் சுமார் 50 கிலோ மீட்டரும் சுற்றிச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. இந்த நிலையைப் போக்கிட, எங்கள் மாவட்ட மக்கள் தொழில், கல்வியில் மேம்பட, அவர்களுடைய நலனைக் கருதியும், ஒகேனக்கல் வரும் சுற்றுலாப் பயணிகளின் நலனைக் கருதியும், பெண்ணாகரம் முதல் போடூர், சிவலிங்கபுரம் வரை உள்ள வனச் சாலையை மீண்டும் அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன். ஆம் எனில், எப்பொழுது அமைத்துத் தருவீர்கள் எனவும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என்.பி. இன்பசேகரன், போதும் உட்காருங்கள். ஒரு கேள்வியை மட்டும் கேளுங்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலையைப் பொறுத்தவரை, வனத் துறைக்கு அவர் கடிதம் கொடுப்பாரேயானால் அல்லது என்மூலம் கொடுப்பார்களேயானால், அதைப் பரிசீலித்து, நிதியாதாரத்தைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.

திரு. பி.வி. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை பணிவோடு வணங்குகிறேன். நாங்கள் வணங்குகின்ற தெய்வம், இதய தெய்வம் அம்மா அவர்களையும் வணங்குகிறேன். எங்களுடைய பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். எங்களுடைய சீர்காழி தொகுதியிலுள்ள அளக்குடி ஊராட்சி, வெள்ளமணல் மீனவக் கிராமத்திற்கும், புதுப்பட்டினம் ஊராட்சி, பழையாறு மீனவக் கிராமத்திற்கும், தாண்டவன்குளம் ஊராட்சி, கொட்டாயமேடு

கிராமத்திற்கும் வனத் துறைமூலம் எடுக்கப்பட்டு வருகின்ற அந்தச் சாலை அமைக்கும் பணியை விரைந்து முடிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரதி அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலைப் பணிகள், வனத் துறையினுடைய பொறியியல் துறைமூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அவர் குறிப்பிட்டதைப்போல, அந்தப் பகுதி மக்கள் மனம் மகிழ்கின்ற அளவிற்கு வனத் துறை விரைவாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள்.*

முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டரை–அடுக்கம் சாலை அமைப்பது சம்பந்தமாக நான் மார்ச் மாதத்திலேயே இங்கு வினா எழுப்பியிருந்தேன். அப்பொழுதே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'உடனடியாக அது செய்யப்படும்' என்று சொன்னார்கள். சாலையைப் பொறுத்தவரையில், வனத் துறைகூட அந்தச் சாலையை போட வேண்டுமென்ற அவசியம் இல்லை. அங்கே இருக்கின்ற முகையூர் ஒன்றியத்தின் மூலமாகவே அந்தச் சாலையைப் போடுவதற்கு அவர்கள் தயாராக இருப்பதாக வனத் துறை அதிகாரிக்கு அனுமதிக் கடிதம் கேட்டு எழுதியிருக்கிறார்கள். ஆகவே, வெகு விரைவில் அதற்கு அனுமதியைக் கொடுத்து, அந்தச் சாலையைப் புதுப்பித்தால் 10 கிலோ மீட்டர் தூரம் சுற்றி வரவேண்டிய அவலநிலை இருக்காது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். உடனடியாக அந்த மாவட்ட அதிகாரிகளை அழைத்து, அவர்களிடம் தொடர்பு கொண்டு, இதைச் செய்து தருமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி அவர்கள் குறிப்பிடும் சாலை, 2006–2011–ல் அவர்களுடைய அரசு இருந்தபோது, அவர்களுடைய கவனத்திற்கு வராமல் போயிருக்கிறது. வந்திருந்தால் அவர்களே நிறைவேற்றியிருப்பார்கள். இருந்தாலும், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அந்தப் பணியை ஆரம்பிக்க விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும். B.D.O. செய்வதென்றால், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம்தான் சொல்ல வேண்டும்; ஒன்றும் பிரச்சினை இல்லை. இருந்தாலும், அந்தக் குறிப்புகளை உள்ளாட்சித் துறை அல்லது வனத் துறையிடம் அளிக்கலாம். அதை எப்படி நிறைவேற்றுவது என்பது எங்களுக்குத் தெரியும். எனவே, குறிப்புகளைக் கொடுத்தால், அந்தக் குறிப்புகளின் ஆதாரத்தை வைத்து, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 162, மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

162—

பகுதிநேர நியாய விலைக் கடை

***14617—திரு. தூசி கே. மோகன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு தொகுதி, தென்தண்டலம் ஊராட்சி, வினாயகபுரம் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், அனக்காவூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக்